**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சதிஷ்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.03.2026**

A1, A2 are present.

**முதல் விசாரணை:-**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை மேலத்தெருவாகிய நடுத்தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமாருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. சாட்சி அ.சா.1 ஆரோன் தெரியும். சாட்சிகள் தர்மராஜ், ராஜன், குரு ஆகியோர்களை தெரியும், அவர்களும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். எங்கள் ஊர் மேலக்காட்டில் எனக்கு பனங்காடு எதுவும் இல்லை. நான் இந்த வழக்கு சம்மந்தமாக இதற்கு முன்பு ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க சென்றுள்ளேன். அவ்வாறு நான் கொடுத்த 164 குவிமுச

வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். என் வீட்டில் மாடு வளர்த்து வருகிறேன். மாடு காணாமல் போனால் காட்டிற்கு செல்வது வழக்கம். அவ்வாறு போகும்போது யாராவது அடிபட்டு கிடந்ததை பார்த்தேனா என்றால் இல்லை. செல்வகுமார் கொலையை நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார்என்னை விசாரிக்கவில்லை. 164 குவிமுச வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ-2 ஆகும். செல்வகுமார் எப்படி இறந்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2019 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் எங்கள் ஊர் இந்து நாடார் சங்கத்தின் அருகே வைத்து எங்கள் ஊரை சேர்ந்த விக்னேஷ் மற்றும் ராஜாசிங் இருவரும் கம்பால் இறந்துபோன செல்வகுமாரை அடித்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர்கள் மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து இருவரையும் சிறையில் அடைத்தார்கள் என்றும், பின்பு அந்த இருவரையும் அவரது நெருங்கிய நண்பரான உத்தரகுமார் என்பவர் இருவரையும் ஜாமீனில் வெளியே எடுத்தார் என்றும், இதனால் செல்வகுமார், உத்தரகுமார் மீது கோபம் கொண்டு அதே 2019 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் அதே இடத்தில் வைத்து செல்வகுமார், உத்தரகுமாரை அடித்தது சம்மந்தமாக உத்தரகுமாரின் அண்ணன் தங்கராஜ், செல்வகுமார் என்ற செல்லக்குட்டி மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவன் மீதும் கேஸ் போட்டார்கள் என்றும், இதனால் மாறி மாறி

அவர்களுக்கிடையே விரோதம் இருந்து வந்ததால் 27.12.2020 ஆம் தேதி சாயங்காலம் நானும் எங்கள் ஊரை சேர்ந்த தர்மராஜ், ராஜன், குருசித்திரங்கன், ஆகியோர்கள் நாங்கள் வழக்கமாக தண்ணி அடிக்கக்கூடிய எங்கள் ஊர் மேல பனங்காடு யோவான் பதநீர் காய்ச்சும் விடிலுக்கு வடபுறம் உள்ள தங்கபாண்டி நாடார் என்பவரின் பனங்காட்டிற்கு சென்று மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது மேற்படி அ.சா.1 ஆரோனும் இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லகுட்டியும் TN92 B 1404 என்ற பஜாஜ் பல்சர் பைக்கில் தண்ணி அடிப்பதற்காக வந்தார்கள் என்றும், நாங்கள் அனைவரும் சேர்ந்து மது அருந்தி கொண்டிருக்கும்போது சாயங்காலம் சுமார் 6.00 மணியளவில் மேற்படி ஆஜர் எதிரிகளான மேற்படி உத்தரகுமாரின் உடன் பிறந்த சகோதரர்களான பட்டுப்பாண்டியும், அருண்குமார் என்ற பெருமாளும் கையில் உருட்டு சவுக்கு கம்புமற்றும் இரும்பு பைப்புடன் TN69 AA 5593 என்ற பதிவெண் கொண்ட Hero Honda splender plus பைக்கில் அங்கு வந்தார்கள் என்றும், வந்தவர்கள் செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை பார்த்து ஏல தேவடியா மவனே நீதானே என் தம்பியை அடித்து கொல்ல பார்த்த கூதிமவனே நீ உயிரோடு இருக்ககூடாது இதோடு செத்து தொலை என்று சொல்லி மேற்படி 1ம் எதிரி பட்டுப்பாண்டி தன் கையிலிருந்த கம்பால் செல்வகுமாரின் தலையின் முன்பகுதியில் இடது பக்கம் ஓங்கி அடித்ததில் இடது பக்கம் நெற்றிவரை பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி 2ம் எதிரி அருண்குமார் என்ற பெருமாள் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் செல்வகுமாரின் முகத்தில் ஓங்கி அடித்ததில் இடது பக்க நாடியிலும், இடது பக்க கீழ்உதட்டியிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வகுமாரின் முகத்தில் மாறி மாறி அடித்ததில் அவரது முன்னந்தலை

இடது பக்கம் வலது கண் புருவம் மற்றும் தலை சிதைந்து கீழே சாய்ந்து விட்டார் என்றும், அதை பார்த்த நானும், என்னுடன்இருந்த ஆரோன், தர்மராஜ், குருசித்தரங்கன், ராஜன், தங்கவேல் ஆகியோர்கள் அவர்கள் இருவரையும் சத்தம் போடவும், இருவரும் ஏல புண்ட மக்களா நீங்களும் கிட்டே வந்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்திவிட்டு பட்டுபாண்டி வைத்திருந்த கம்பை செல்வகுமார் மீது வீசிவிட்டு, அருண்குமார் என்ற பெருமாள் வைத்திருந்த இரும்பு பைப்புடன் அவர்கள் வந்த பைக்கிலேயே ஏறி சென்றுவிட்டார்கள் என்றும், மேற்படி எதிரிகள் இருவரும் செல்வகுமாரை அடித்ததில் அவன் தலை சிதைந்து அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டான் என்றும், இது சம்மந்தமாக மேற்படி ஆரோன் எதிரிகள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்பதை தெரிந்து கொண்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு நாங்களும் எதிரிகளும் ஒரேஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துபொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.
(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.அய்யாகுட்டி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.03.2026**

A1, A2 are present.

**முதல் விசாரணை:–**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை பிள்ளையார்தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனக்கு தெரியும். அவரது அண்ணன் அ.சா.1 ஆரோனை தெரியும். அவர் எனது ஊர்க்காரரர். அ.சா.2, தர்மராஜ், அ.சா.5 சதிஷ், அ.சா.3 ராஜன், அ.சா.4 குரு ஆகியோர்களை தெரியும், அவர்களும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமாருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன கேள்விப்பட்டேன் என்றால் செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை யாரோ அடித்து போட்டுவிட்டு ஆஸ்பத்திரியில் இருப்பதாக தகவல் அறிந்தேன். தகவல் தெரிந்து தூத்துக்குடி பெரிய

ஆஸ்பத்திரிக்கு வந்துசென்றேன். அங்கு மேரிஜெமிதா என்ற ஆய்வாளர் மற்றும் இறந்துபோன செல்வகுமாரின் உறவினர்கள் இருந்தார்கள். நான் அவர்களிடம் என்ன நடந்தது என்று கேட்கவில்லை. அதனால் செல்வகுமார் எப்படி இறந்தான், யார் அவனை அடித்து கொன்றார்கள் என்ற விவரம் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்களில் சிலவற்றிற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2019 ஆம் வருடம் ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டிக்கும் ஏற்பட்ட முன்பகை காரணமாக 27.12.2019 ஆம் தேதி சாயங்காலம் பண்டாரவிளை ஊரை சேர்ந்த சதிஷ், தர்மராஜ், ராஜன், தங்கவேல், குருசித்தரங்கன் ஆகியோர்கள் வழக்கமாக மது அருந்தக்கூடிய பண்டாரவிளை மேலபனங்காடு யோவன் பதநீர் காய்ச்சும் விடுதலுக்கு தென்புறம் உள்ள சண்முகம் நாதன் பனங்காட்டிற்கு சென்று இறந்துபோன செல்வகுமாரும், மேற்படி நபர்களும் மது அருந்திக்கொண்டிருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் முன்விரோதம் காரணமாக செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை பார்த்து ஏல தேவடியா மவனே நீதானே என் தம்பியை அடித்து கொல்ல பார்த்தே, நீ உயிருடன் இருக்கக்கூடாது செத்து தொலை என்று சொல்லி எதிரிகள் வைத்திருந்த கம்பாலும், இரும்பு பைப்பாலும் செல்லக்குட்டியின் முன்தலை, வலதுகண் புருவம் முகத்திலும் மாறி மாறி அடித்து முகம் சிதைந்து அந்த இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், அதன்பின்னர் செல்வகுமாரின் அண்ணன் ஆரோன் சட்டப்படி நடவடிக்கை எடுக்க புகார் மனு

கொடுத்ததாகவும், கேள்விப்பட்டுதான் அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு வந்தேன் என்றும், அங்கு வைத்து ஆய்வாளர் விசாரணையில்மேற்படி விவரத்தை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊர்க்காரர் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துபொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டபடி கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.மோசஸ்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.03.2026**

A1, A2 are present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், ஏரல் நாடார் 2 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். 2020 ஆம் வருடம் மேற்படி ஊரில் நட்டார்அம்மன்தெருவில் குடியிருந்து வந்தேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். 27.12.2020 ஆம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் நானும், யாக்கோபு என்பவரும் பண்டாரவிளையில் உள்ள ஒரு பனங்காட்டில் நின்றுகொண்டிருந்தபோது செல்வகுமார் கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து ஏரல் போலீசார் வந்து இரத்தக்கறை படிந்த மண், இரத்தக்கறை படியாத மண், ஒரு கம்பையும், மற்றும் ஒரு பைக்கையும் எடுத்தார்கள். அந்த இடத்தை பார்த்து மேப் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு எழுதியதில் நானும், யாக்கோபும் கையெழுத்து செய்துகொடுத்தோம். நான் கையெழுத்திட்ட பார்வைமகசர் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-3** ஆகும். 2 வதாக நானும், முதலாவதாக யாக்கோபு கையெழுத்து செய்துள்ளார். பொருட்களை

கைப்பற்றியதற்கு எழுதிக்கொண்டதிலும் நானும், யாக்கோபும் கையெழுத்து செய்துகொடுத்தோம். அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–4** ஆகும். அதிலும் 2 வதாக நானும், முதலாவதாக யாக்கோபு கையெழுத்து செய்துள்ளார். அந்த பொருட்களை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட இயலும். அவைகள் நீதிமன்றத்தல் காண்பிக்கப்படும் சம்பவ இடத்தில் காணப்பட்ட இரத்தக்கறை படிந்த மண் சிறிதளவு **(சொத்துப்பட்டியல் வரிசை எண். 6 ல் உள்ளது) அது அ.சா.பொ. 9** ஆகும். நீதிமன்றத்தல் காண்பிக்கப்படும் சம்பவ இடத்தில் காணப்பட்ட இரத்தக்கறை படியாத மண் சிறிதளவு **(சொத்துப்பட்டியல் வரிசை எண். 7 ல் உள்ளது) அது அ.சா.பொ. 10** ஆகும். நீதிமன்றத்தல் காண்பிக்கப்படும் சுமார் 73 செ.மீ நீளமுள்ள இரத்தக்கறை படிந்த சவுக்கு உருட்டு கம்பு ஒன்று அ.சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.